**சி.சி.5/2022**

**தேதி: 08.04.2026**

**அ.சா.2 பிரேம்நாத், த/பெ.சுதர்சனம்**

**எதிரி ஆஜர்**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எந்த ஊரில் வசித்து வருகிறீர்கள் என்றால் வேடல் கிராமத்தில் வசித்து வருகிறேன். என்ன தொழில் செய்துவருகிறீர்கள் என்றால் கார் டிரைவராக இருந்துவருகிறேன். யாரிடம் வேலை செய்து வருகிறீர்கள் என்றால் புகார்தாரர் தேன்மொழியிடம் வேலை பார்த்து வருகிறேன். எவ்வளவு நாட்களாக அவரிடம் வேலை செய்து வருகிறீர்கள் என்றால் 10 வருடமாக வேலை செய்து வருகிறேன்.

தேன்மொழி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் துணிக்கடை வைத்துள்ளார். அவர் வருமான வரி செலுத்தி வருகிறாரா என்றால் அது எனக்கு தெரியாது. இந்த வழக்கில் தொடர்புடைய எதிரி வெங்கடேசன் என்பவரை உங்களுக்கு தெரியாது என்றால் அவர் புகார்தாரர் வீட்டிற்கு வந்திருக்கிறார் அங்கு வைத்து அவரை 7,8 வருடமாக தெரியும். 7-8 வருடங்களில் எத்தனை முறை எதிரியை நீங்கள் பார்த்துள்ளீர்கள் என்றால் 2 முறை பார்த்துள்ளேன்.

எதிரி வெங்கடேசன் என்ன வேலை செய்கிறார் என்றால் எனக்கு நேரடியாக தெரியாது புகார்தாரர் மூலமாக எதிரி லாரி வைத்திருக்கிறார் என்று தெரிந்துகொண்டேன். எவ்வளவு தொகை எதிரி கடனாக பெற்றார் என்றால் ரூ.5 லட்சம் பெற்றார். நீங்கள் நேரடியாக பார்த்தீர்களா என்றால் ஆமாம். எங்கு வைத்து எதிரி பணம் பெற்றார் என்றால் தேன்மொழி அக்கா வீட்டில் வைத்து வாங்கினார். தேன்மொழி அக்கா வீட்டு விலாசம் தெரியுமா என்றால் தெரியும். வீட்டிற்கு வெளியே கடன் பெற்றாரா அல்லது உள்ளே கடன் பெற்றாரா என்றால் வீட்டிற்கு உள்ளே வைத்து பெற்றார். பணம் ரொக்கமாக கொடுக்கப்பட்டதா அல்லது காசோலையாக கொடுக்கப்பட்டதா என்றால் ரொக்கமாக கொடுக்கப்பட்டது.

ரூ.5 லட்சத்தை என்ன டினாமினேஷனில் கொடுக்கப்பட்டது என்றால் ரூ.2000 தாள்களும் ரூ.500 தாள்களும் கொடுத்தார். எத்தனை 2000 ரூபாய் தாள்கள், எத்தனை 500 ரூ தாள்கள் கொடுக்கப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. எந்த தேதியில் பணம் கொடுக்கப்பட்டது என்றால் 18.01.2019 அன்று கொடுக்கப்பட்டது. மேற்படி தேதியை எவ்வாறு குறிப்பிட்டு சொல்கிறீர்கள் என்றால் நினைவில் அடிப்படையில் சொல்கிறேன்.

எதிரி பணத்தை பெற்றுக்கொண்டு வேறு என்ன செய்தார் என்றால் அந்த நேரத்திலேயே கையெழுத்திட்ட காசோலையை கொடுத்தார். என்ன காரணத்திற்காக ரூ.5 லட்சம் கொடுக்கப்பட்டது என்ற விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. சம்பவ சமயம் உங்களுக்கு என்ன வயது இருக்கும் என்றால் 20 வயது இருக்கும். நீங்கள் புகார்தாரரிடம் டிரைவராக வேலை செய்து வருகிற காரணத்தினால் அந்த அம்மாவிற்கு ஆதரவாக நீங்கள் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்களுக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது. புகார்தாரரிடம் கார் ஓட்டுநராக இருக்கும் காரணத்தினாலேயே அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பிரமாண வாக்குமூலத்தில் கையெழுத்து செய்து பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

நீங்கள் சொல்லும் தேதியில் எதிரி பணமும் பெறவில்லை அதற்கு ஈடாக காசோலையையும் கொடுக்கவில்லை என்று சொன்னால் அது தவறு. எதன் அடிப்படையில் நீங்கள் சாட்சியம் அளிக்க வந்துள்ளீர்கள் என்றால் புகார்தாரர் வழக்கில் நான் ஏற்கனவே சாட்சியம் அளித்துள்ளேன் அதனை தொடர்ந்து இன்று வழக்கறிஞர் போன் மூலம் தகவல் சொன்னதன் பேரில் குறுக்கு விசாரணைக்காக ஆஜர் ஆனேன். நீங்கள் சொல்வது போல் புகார்தாரர் துணிக்கடை நடத்தவில்லை வட்டி தொழில் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.